# 6th Social Science Lesson 15 Notes in Tamil

## 15. பொருளியல் – ஓர் அறிமுகம்

1. **கிராமங்களில் முக்கியத் தொழில் எது?**

   விவசாயம்

2. **சந்தை:**

   கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை.

3. **நுகர்வோர் பொருட்கள் என்றால் என்ன?**

   அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

   (எ.கா) அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை

4. **பண்டமாற்று முறை என்றால் என்ன?**

   ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் பண்டமாற்று முறை எனப்படும்.

5. **முதல்நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

   உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல்நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.

   - வேளாண்மை
   - கால்நடை வளர்த்தல்
   - மீன் பிடித்தல்
   - கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்
   - கனிகள், கொட்டைகள் , தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல்

6. வேளாண்மை செய்வதற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே **கிராமம், ஊர்** என்று அழைக்கப்பட்டன.

7. **இந்தியாவின் பொருளாதார ஆணிவேர் எது?**

   விவசாயம்

8. **உழவர்கள் என்று அழைக்கப்படுவர் யார்?**

வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**9. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருப்பவை எவை?**

விவசயம் மற்றும் தொழிற்சாலைகள்

**10. இரண்டாம் நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

**11. தொழில்கள் எவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன?**

உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**12. மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்:**

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் - பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் - காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- கனிமத் தொழிற்சாலைகள் - சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- கடல்சார் தொழிற்சாலைகள் - கடல் உணவு பதப்படுத்துதல்

13. “கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு” – மகாத்மா காந்தி

**14. மூன்றாம் நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- போக்குவரத்து - சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் - பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி - பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.

**15. உற்பத்தித் தொழிலிலும் சேவைத்தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம் எது?**

தமிழ்நாடு. இவை நகரங்களை மையமாகக்கொண்டே இயங்குகின்றன.

16. **அன்றாடப் பணப்புழக்கத்திற்குப்** பெருமளவில் **வங்கிகள்** உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.** –குறள் 0479

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போல தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

winmeen.com